உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

| சதங்கை ௧. | காரைக்குடி துந்துபி௵ கார்த்திகை௴ | மணி ௮. |

வணக்கம்.

முருகக்கடவுள்.

கத்துந் தரங்க மெடுத்தெறியக்
    கடுஞ்சூ லுளைந்து வலம்புரிகள்
கரையிற் றவழ்ந்து வாலுகத்திற்
    கான்ற மணிக்கு விலையுண்டு
தத்துங்கரட விகடதட
    தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
    தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
    குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
    கூறுந் தரமுண் டுன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையில்லை
    முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
    முதல்வா முத்தந் தருகவே.

—பகழிக்கூத்தர்.

திருமால்.

இலையும் பசும்புல்லும் செஞ்சுட் டரவும் இடைச்சிமடித்
தலையும் சயனங்கொண் டீரடி யென்மனத் தாமரையில்
அலையுஞ் செயலொழித் திங்கிருந் தாலென்ன அஞ்சனமா
மலையுங் கடலும் பொருந்தமிழ்ச் சோலை மலையரசே.

—அழகர் கலம்பகம்.

ராட்டினத் தொழில்.

ராட்டினத் தொழிலை அபிவிருத்தி செய்தல் வேண்டுமென்று நமது நாடெங்கும் பேசப்படுகிறது. பல அன்பர்கள் ஆங்காங்கே முயற்சியும் செய்து வருகின்றனர். எங்கும் இதைப்பற்றிய பேச்சும் இயக்கமும் இப்போது உண்டாகியிருக்கின்றன. சில வன்பர்கள், "ராட்டினம் மில்களோடு போட்டிபோட முடியுமா? உவ்வளவு நயமான துணி கிடைக்குமா? விலை நயப்படுமா? ஏராளமான துணி உற்பத்தியாக்க முடியுமா?" என்ற இத்யாதி கேள்விகளைக் கேட்க முன் வருகின்றனர்.

இப்போது சுமார் ஒரு வருஷ அநுபவமுள்ள, நம் நண்பர் பலர் நூற்றிருபதாம் நம்பர் மில் நூலுக்கு இணையாகவும் சாடு முரடின்றி ஒரே சரமாகவும் நெசவுக்கு உபயோகமாம்படி, நூற்று வருவதை நாம் நேரிலேயே பார்க்கிறோம். இன்னும் சில நாள் பழக்கத்தில் இருநூறு நம்பர் வரை மெல்லிய நூல் நூற்றல் கூடுமென்ற நம்பிக்கை எவருக்கும் உண்டாகிவிட்டது. டக்கா மஸ்லினைப்பற்றிய விஷயத்தில் நம்பிக்கை யற்றவரும் நம்பும்படியான காலம் வந்து கொண்டிருக்கிறது. நேரிற் பார்க்குங் காலமும் சமீபத்திலிருக்கிறதென்று நாம் உறுதி கூறுவோம். வேட்டிகள் வரவர மெல்லிதாகக் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. இந்தத் தொழிலானது எவ்வளவு தூரம் ஆதரிக்கப்படுகிறதோ அவ்வளவு விரைவில் மெல்லிய நூல் கிடைத்துவிடும்.

பஞ்சை உரிய காலத்தில் வாங்கிக் கட்டாதபடியால் விலை அதிகப்படுவதாலும், நூல் மிகத்தடிப்பாக நூற்கப்பெறுவதால் அதிகமான எடை நிற்பதாலும், நூற்பவரின் புதுப்பழக்கத்தால் அதிக வேகமாக நூற்க முடியாமை காரணமாகக் கூலியதிகரிப்பதாலும், விலை அதிகரிக்கிறதென்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். மில்லில் நூற்பதற்கும் கையால் நூற்பதற்கும் இயற்கையான வித்தியாசம் சொற்பமிருக்கலாம். தற்போது உள்நாட்டு மில்களில் நூற்கப்பெற்ற ௨0 நம்பர் நூல் பத்து பவுண்டு பெட்டியின்விலை சுமார் ௧௨ ரூபாயாகவிற்கிறது. கதர் நூல் சாதாரணமாக ௧௨ முதல்

௨௦ நம்பர் வரை நூற்கப்பெறுகிறது. விலை சிலவிடங்களில் பன்னிரண்டு பதின்மூன்று ரூபாய்க்கும் சிலவிடங்களில் அதிகமாகவும் விற்கப்படுகிறது. பழக்கம் அதிகப்பட அதிகப்பட நூலும் மெல்லிதாகும். ஒரே நிதானமாகவும் நெசவுக்கு போக்கியமாகவும் வந்து விட்டால் இந்தத் தொழில் விருத்திபடைதல் கூடும். மக்களுள் ஊக்கம் குன்றாதிருந்து நல்ல நிலைக்கு வருமானால், மில் நூலோடு போட்டிபோட்டும் பார்க்கலாமென்றே நமக்குத் தோன்றுகிறது.

மில்லில் கிடைக்கிற அளவு ராட்டினத்தில் நூல் கிடைக்குமா? வென்பதை யோஜிக்குமிடத்து, கட்டாயம்கிடைக்குமென்று நம்ப இடமிருக்கிறது. நமது நண்பர்கள் எண்ணுகிறபடி, ஒரு மில்லில் நூற்கிற அளவு ஒரு ராட்டினத்தில் நூற்க முடியாதென்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். ஒரு மில்லின் தொழிலைப் பங்கிட்டு, ஆயிரக்கணக்கான பெண்கள் கையில் கொடுக்கவேண்டுமென்று கூறுகிறோம். இதில் மில்லையும் ராட்டினத்தையும் நேருக்கு நேரே சரிபார்ப்பது முறையன்று. பயனைப்பார்க்குமிடத்து நமக்கு வேண்டிய நூலல்லாமல் வேறு நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நூலையும், நாம் ராட்டினத்திலிருந்து பெறமார்க்கமிருக்கிறது. நமது நாட்டிலுள்ள முப்பது கோடிக்கதிகமானமக்களில், மற்றவர்களெல்லாரையும் வேறு வேலைகளைச் செய்யும்படி விட்டுவிட்டுத் தாங்களும் குடும்பவேலையைப் பார்த்துக்கொண்டு, ஐந்து கோடி பெண்மக்கள் ராட்டினத்தைச் சுழற்றுவார்களானால், இந்த உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் வேண்டிய துணிக்கு நூல் நூற்றுவிடலாம். மில்லில்லாத காலத்தில், நமது நாட்டு மக்கள் துணிக்குத் துன்புற்ற கதையைக் கேட்டதில்லையே! நெசவு மில்கள் தலையெடுத்தாடுகிற இக்காலத்தில், கும்பகோணம் கோயமுத்தூர் காஞ்சிபுரம் அறப்புக்கோட்டை மன்னார்குடி சேலம் மதுரை முதலியவிடங்களில், கைத்தறி நெசவு குறைவின்றி நடைபெறவில்லையா? மில்களின் போட்டி யெவ்வளவுண்டான போதிலும் இந்த நெசவு நடக்காமற் போகவில்லையே? ஆயிரக்கணக்கான மக்கள் இத்தொழிலில் பிழைக்கவில்லையா? பேராசையின்றிக் கிடைத்ததைக்கொண்டு வாழும் மக்களுக்கு எந்தப் போட்டியி

னும் கவலையில்லை. தொழிலில் ஊக்கமும், சொற்பக் கூலியில் மகிழ்ச்சியும், நல்ல உழைப்புமுள்ள நெசவுக்காரர்கள் தங்கள் தொழிலை முறைப்படியே செய்துகொண்டு போகின்றனர். மில்களில் ஆயிரக்கணக்கான மடிகள் தயாராவதுபோல, கைத்தறியில் ஆகவில்லையேயென்று கேட்கமுடியுமா? மில்களில் தினமொன்றுக்கு ஆயிரக்கணக்கான கஜம் துணி நெய்யப்படுகிறது. கைத்தறியில் ஐந்தாறு கஜம் துணிதான் நெய்யப்படுகிறது. அதற்காக, சரக்குக் குறைவதில்லையென்பதை யாரும் ஒப்புக்கொள்ளாமல் முடியாது. இந்த நிமிஷத்தில் மில் நெசவுத் துணிகள் நிறுத்தப்படுமானால், கை நெசவைக்கொண்டு இந்தியாவுக்குத் துணி தயாரித்துக்கொள்ள முடியுமென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். இம்மாதிரியே என் ராட்டினத்தைக் கொள்ளுதல் கூடாதென்று நாம் கேட்கிறோம்! ஆரம்பத்தில் இந்த தத்துவம் சிலருக்கே விளங்கும். அநுபவத்தில் வரும்போது பலருக்கும் விளங்கலாம். நிற்க,

எந்தவிதத்திலும் போட்டிபோட வேண்டுமென்றாவது, அல்லது இதைஉலகிற்கோர் வியாபாரப்பொருளாக்கிவிடவேண்டுமென்றாவது நாம் கருதி, கைராட்டினத் தொழிலை வளர்க்க வேண்டுமென்று கூற வரவில்லை. "கஞ்சிக் கலையும் மக்களுக்குக் கட்டாயம் தொழில் வேண்டும். அதுவும் வீட்டினுள்ளிருந்து கௌரவமாகச் செய்யக் கூடியதா யிருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட தொழிலில் தலைசிறந்தது, கைராட்டினத் 'தொழிலாகு மாதலால் அதை வளர்த்தல் வேண்டுமென்று நாம் கூறுகிறோம். குடிசைக் கைத்தொழில் இல்லாவிட்டால் ஏழை மக்கள் வயிறு பசிப்பிணியைத் தினந்தோறும் அடைந்து நிற்குமென்பது சத்யம். நாட்டிலுள்ள ஏழை மக்களின் வயிறு காய்ந்து கிடக்குமானால், அந்த நாட்டில் தருமமும் செல்வமும் இன்பமும் உண்டாகமாட்டா. நாட்டிற் சிலர் பணக்காரரா யிருத்தல் மட்டும், நாட்டின் நன்மையை விருத்தி செய்ய முடியாது. நாடு செழிப்புற வேண்டுமானால் ஏழை மக்களது குடிசைகளில், வயிறு வளர்க்கு மளவாவது வரும்படி கிடைத்தல் வேண்டும். நன்றாயிருக்கிற நாடுகளில் ஒவ்வொரு குடிசையிலும் இனிய பல தொழில்கள் செய்யப் பெறுகின்றன. ஜப்பான் முதலிய செல்வ நாடுகளில்—சுதந்தர நாடுக

ளில் ஏராளமான குடிசைக் கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. அம்முயற்சியைப் பலப்படுத்துதற்கும், பல வேறு புதிய தொழில்களை உண்டாக்குவதற்கும் அரசாங்கத்தார் பெருமுயற்சி செய்து வருகின்றனர். மேலைத் தேசத்து ஒற்றர் பலர், இந்தியா போன்ற தேசங்களின் மூலை முடுக்குகள் எங்குஞ் சென்று, "யாருக்கு எந்த சாமான் தேவையாக விருக்கின்றது; எங்கு எவ்வித சாமான் தயாரிக்கப் பெறுகின்றது; அவற்றை யெப்படி போட்டிபோட்டு வெற்றி பெறலாமென்று யோஜித்து அலைந்து கொண்டிருக்கின்றனர். இப்படியேதான் நமது நாட்டிலுள்ள ஏழை மக்கள் கையி லிருந்த தொழில்கள் முற்றும் அழிக்கப் பெற்றுப் பிறநாட்டார் வசமாகிவிட்டன. இன்னும், நமக்கு அனாவசியமான பொருள்கள் பல, வெளிநாடுகளிலிருந்து செய்தனுப்பப்படுகின்றன. அவற்றை நமது மக்கள் தெய்வப் பிரசாதமாகப் போற்றிவருகின்றனர். உபயோக மற்ற சில பொருள்கள் இல்லாமல் நமது நித்திய வாழ்க்கை நடைபெறுவது கடினமென்று கருதும்படியான காலமும் வந்து விட்டது. இதுகாலை ஜனநாயகத்தை விரும்பும் மக்கள் உலகில் மிகுந்து வருவதால், எல்லா தேசத்திலும் குடிசைக் கைத் தொழில்களை விருத்தி செய்தல் வேண்டுமென்ற கூக்குரல் மிகுந்து வருகின்றது. அதன் எதிரொலி நமது நாட்டிலும் உண்டாகி யிருக்கிறது. சட்டசபைகளிலும், ஆங்காங்கே ஒவ்வொரு சமயத்தில் இதைப்பற்றிய பேச்சு நடந்துகொண்டுதான் இருக்கிறது. அதன்படி பெருமுயற்சி தீவிரமாக நடைபெறுகிறதென்று கூற முடியவில்லை.

மக்கட்கு இன்றியமையாது வேண்டப்படுவது உணவும் உடையுமேயாகும். இவ்விரண்டு மில்லாத மக்கள் முன்னிலையில் வேறுபொருள்கள்பயனிலவாகுமென்று நாம் கூறவேண்டியதில்லை. இவ்விரண்டும் நிறைந்து கிடக்குமாயின், வேறு பொருள்களில் மனம் பற்றும். முற்காலத்தில் நமது நாடு பயிர்த்தொழிலையும், நூற்று நெய்யுந் தொழிலையும் மிகுதியாகப்பற்றி ஏனைய தொழில்களைத் துணைத்தொழில்களாகக் கொண்டு நின்றது. இந்த முக்கியப் பொருள்கள் நமது நாட்டின் தேவைக்கதிகமாகவே தயாரிக்கப் பெற்றபடியால், ஏனைய நாடுகட்கும் எஞ்சிய பாகத்தை உதவி

வந்திருப்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. அக்காலத்தில் ராட்டினத்தில் நூல்நூற்குந் தொழிலைக் குடிசைத் தொழிலாகப் பெரும்பாலும் பெண்மக்கள் கைக்கொண்டிருந்தனர். நெசவுத்தொழிலும் குடிசைத்தொழிலாகவேயிருந்துவந்தது. அந்நியநாட்டாருடையசம்பந்தம் அதிகப்பட்டபின்னர், இத்தொழிலுக்கு உலை வைக்கப் பட்டிருக்கிறதென்பது மறக்க முடியாத விஷயமாகும். வெளிநாட்டார் மில்களில் நூல் நூற்று அதிகமாக அனுப்பி ராட்டினத் தொழிலை அழிக்க முயன்றதன் காரணமாகக் கொஞ்சங் கொஞ்சமாக ராட்டினக் கைத்தொழில் அழிய வாரம்பித்தது. சுமார் இற்றைக்கு ஐம்பது வருஷங்களுக் குள்ளாகவே, நமது தமிழ் நாட்டில் ராட்டினத் தொழில் ஏறக்குறைய முற்றும் நீங்கி விட்டது. ராட்டினத்தொழிலை உத்தமத் தொழிலாகக் கொண்டிருந்த பழங்கிழவிகள் இன்னும் உயிரோடிருக்கின்றனர். அவர்கள் இன்னும் இந்தப் புண்ணியத் தொழிலை மறக்கவில்லை. ராட்டின நூல் என்று கூறும்போது, அக்கிழவிகள் கையெடுத்து வணங்குகின்றனர். தமிழ்நாட்டு மக்களிற் பல வகுப்பார், இந்த ராட்டினத்தைத் தம் மக்கட்கு ஸ்ரீதனப் பொருளாகக் கொடுத்தனர். ராட்டினத்தெய்வ மென்று பல விடங்களில் பூஜை புரிந்திருக்கின்றன ரென்றும் அறிகிறோம். இந்த ராட்டினத் தொழிலானது, ஏழை மாதர்கட்கு இன்றியமையாத தொழிலாகும். பெண் மக்களின் மகிமைக்கு நமது நாடு முதன்மை பெற்றது. கற்பொழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதும் நாடு ஒன்றிருக்குமானால், அது நமது நாடேயாகும். பெண்மக்கள் வெளியே சென்று, பிறிதொரு ஆடவனிடத்து அடங்கித் தொழில் புரிவது, இந்திய தர்மத்துக்கு முற்றும் விரோதமாகு மென்பதை உண்மை இந்தியன் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். ஏழைப் பெண்மக்கள் இந்தப் பாழடைந்த காலத்தில், வேறொரு பணக்கார முதலாளியின் வசப்பட்டுத் தொழில் புரிந்து ஜீவிப்பதில், எத்தனை கேடுண்டாகிறதென்பதைச் சிறிது சிந்தித் துணர்வார் அறியர். வயிற்றுக்கில்லாத கொடுமையால்—பசியைப் பொறுத்துப் பலநாளிருக்க முடியாத தன்மையால், இந்திய நாட்டுப் பெண் தெய்வங்கள் அவமானப் படுத்தப்படுகின்றனர். பிறந்த நாட்டில் இன்ப வாழ்க்கை

வாழ்வது போதாதென்று, பிற நாடுகளில் அதிக்கிரமித்து இன்னும் பன்மடங் கின்பத்தை நுகர ஏனைய நாட்டுப் பெண்மக்கள் விரும்பி நிற்கு மிந்நாளில், நமது சகோதரிகள் சொந்த நாட்டில் குடிக்கக் கஞ்சியற்று வெளிநாடுகளுக்கு அடிமையாகச் சென்று படுந் துன்பங் கொஞ்சமோ? அவர்கள் படுந்துன்பத்தை இரக்கமுடையார் கேட்டுச் சகிக்க முடியுமோ? எதற்காக அவர்கள் கண்டவிடமெல்லாம் கழிக்கப்பெற்று அவமானப்படுத்தப்பட்டுத் துன்புறுகின்றனர்? வயிற்றுக்குக் கூழின்றியன்றோ? ஏனைய நாட்டுப் பெண்மக்களைப் போன்று மாதமொன்றுக்குப் பல நூறு ரூபாய்களை விரும்பவில்லையே! மாடமாளிகைகளை விரும்பவில்லையே! அழகிய உடைகளைக் கேட்கவில்லையே! வூர்திகளை விரும்பவில்லையே! தயிரும் பாலும் நெய்யுந் தேனும் கூடிய உணவு கேட்கவில்லையே! கேப்பைக் கூழும், வரகின் சோறும், கம்பங் கஞ்சியுந்தானே விரும்புகின்றனர். அதற்கும் வழியற்ற நாட்டிலிருப்பவர் மக்களாவரோ? இந்த அற்ப வாழ்க்கை—ஈ வாழ்க்கை எறும்பு வாழ்க்கையையாவது மானத்தைக் காப்பாற்றி வாழ ஒரு வழியை உண்டாக்குதல் கூடாதா?

நமது நாட்டுப் பெண்மக்கள் பலர், குடிக்கக் கஞ்சியற்றுக் கட்டிளம் பருவத்திலேயே களையுற்று நரையுற்றுத் திரையுற்று வாடி வதங்கி இரங்கண்ணவும் நாணி, வயிறும் முதுகும் உலர்ந்தொட்டி ஆங்காங்கே காணப்படவில்லையா? இளங் குழந்தைகள் இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை சுவைதொறுஞ் சுவைதொறும் பால் காணாது, அழுதற்குஞ் செயலற்றுக்கிடப்பதைக் கண்டதில்லையோ? பணக்காரரிடம் இல்லாத ஏழைப் பெண்மக்கள் சென்று, தொழில் புரிந்து படும் அவமானத்தைப் பார்த்ததில்லையோ? இத்தனை துன்பமும் கைராட்டினத் தொழில் செழித்திருந்த காலத்திருந்தனவோ? தன் வீட்டிலுள்ளிருந்து கைராட்டினத்தைச் சுதந்திரமாகச் சுழற்றிக், கிடைப்பதைக் கொண்டு கால் வயிறோ அரை வயிறோ கஞ்சி குடிப்பதில் உங்கட்கு இரக்கம் பிறக்கவில்லையா? கணவனில்லாத கற்புடைய மங்கையர் பலர், கஞ்சியற்று, தொழில் செய்ய வெளியேறவும் முடியாது சிறைப்பட்டவராக

வீட்டினுட் டெக்கிறக்கின்றனர். உடுத்த உடையின்மையால் உள்ளே கிடக்கிறப்பார் எத்துணைபேர்? அவர்கட்கு இந்த நாட்டினத்தொழில் எத்துணை நன்மை பயக்குமென்பதை யெண்ணிப் பார்ப்பீர்களோ? ஒரு மில்லைத்து ஒரு கோடிவேட்டி நெய்தாலும், லாபம்முற்றும் ஒருசில பணக்காரர்க்கேசேர்வதன்றி ஏழைகட்கென்னுண்டு? மானத்தை விட்டு—சுவாதீனத்தை விட்டு—பணக்கார முதலாளிகளிடத்துக் கட்டுண்டு முட்டுண்டு அடியுண்டு மிதியுண்டு துன்புறும் ஏழைமக்களைத் தினமும் நாம் காணவில்லையா? ஏழைகள் வயிறெரிய மில்லிலிருந்து வரும் வேட்டியை உடல்நிறையச் சுற்றுவதினும், ஏழை மக்களின் உடல்வளர—உயிர்வளர—மானம் வளர—இன்பம்வளர வளரும் நாட்டினத்துணியில் நாலும் முழம் கட்டி உயிர் வாழ்வது பெருமை யில்லையா? ஏழைகள் அற்பப் பொருள் பெற்று வாழ்வதில் விருப்பமுள்ளவர்கள்—இரக்கம் சிறிதாவ துள்ளவர்கள்—மற்றொரு வாழ்வு நமக்குண்டு, மறுபிறப்புண்டு, அங்கு இன்ப துன்பமுண்டு, நாமும் ஏழையராகப் பிறத்தல் கூடுமென்ற எண்ணமுள்ள ஆஸ்திக புத்தியுள்ளவர்கள்—இப்போதே கதராடை யுடுத்துதிரார். கதராடை முரடாயின் என்னே? சாக்கேயாயினும் என்னே? இந்தியாவிற் பிறந்து இந்தியாவில் வளர்ந்து இந்தியக் காற்றை நுகர்ந்து இந்திய உணவை யுண்ட இந்திய மக்கள், இந்தியத் துணியை யுடுத்த நாணுதல் ஆமோ? பெரியோர்களே! உங்களுடைய பிள்ளைப் பருவத்தில் உடுத்தின துணியானது, மீண்டும் உங்கள் முன்னே நிற்கிறது. அதனை யுடுத்துங்கள்! வாலிபர்களே! எதிர்காலத்தில் உங்களைப் புனிதப் படுத்துவதும், இந்தியர்களை இந்தியராக்குவதுமான புண்ணியத் துணி உங்கள் முன்னே நிற்கின்றது. புற அழகை யொதுக்கித் தள்ளுங்கள்! அக அழகைப் போற்றுங்கள்! டம்பத்தை யகற்றுங்கள்! அடக்கத்தைக் கொள்ளுங்கள்! மாயையை விலக்குங்கள்! ஞானத்தைக் கொள்ளுங்கள்! அசுத்தவழியை நீக்குங்கள்! தர்ம வழியிலேயே செல்லுங்கள்! ஏழை மக்களிடம் கருணை கொள்ளுங்கள்! அஞ்சா நெஞ்சத்தைக் கொள்ளுங்கள்! தாய்மார்களே! கைராட்டினத்தை யெடுத்துச் சுழற்றுங்கள்! மக்கட்கு விடுதலை யளியுங்கள்!

சோ. மு.

ஜர்மனியின் நிலைமையும் மார்க் நாணயத்தின் மதிப்புக் குறைவும்:

(ஜர் மொழி பெயர்ப்பு.)

"ஒருமாத காலத்துக்குமுன் மார்க் என்னும் நாணயமானது, ஒரு டாலருக்கு ௫௦௦-ஆகநின்றது. இன்று ௨௦௦௦ ஆகநிற்கின்றது. இது ஜர்மனியைக் கடன் செலுத்தமுடியாதபடி செய்து, ஒடுக்கி விடக்கூடிய திட்டமேயாகும். ஜர்மனியானது அதிகமான இயற்கை வளப்பங்களையுடையதேசமாக இருப்பினும் ஆஸ்திரியாவைக் காட்டிலும்மிகுந்த அஸ்திபாரபலமுள்ளதாயிருப்பினும், சென்றவருஷத்தில் ஆஸ்திரியா அடைந்திருந்தநிலைமையைக் காட்டிலும், தாழ்மையான நிலையை, வரவு செலவு வகையில் ஜர்மனியானது இக்காலத்தில் அடையப்போகின்றது. வியன்னாவைப்போலத் தெருக்களில் பிச்சைக்காரர்களை யொருவன் ஜர்மனியில் காணமுடியாவிடினும், (நான் எனது சென்ற கடிதத்தில் எழுத முயன்றது போல) ஜர்மனியில் உண்மையான தொல்லையும் துக்கமுமே காணும்படியான நிலைமை வாய்க்காத்திருக்கிறது. ஆஸ்திரியர் தொல்லைப்பட்டது போலவே, ஜர்மனியரிற் பெரும்பாலோர் எதிர் பார்க்கப்படுகிறார்கள். திடீரென்று ஏற்பட்ட, மார்க் நாணயத்தின் அதிகம் வீழ்ந்த மதிப்புக் குறைவானது, ஜர்மனியைச் சார்ந்துள்ள தேசங்களாகிய ஆஸ்திரியா முதலியவற்றையும் கடன் செலுத்த முடியாத நிலைமைக்குக் கொண்டுவரக்கூடியதா யிருக்கின்றது. ஆஸ்திரியர் ஜீக்வகையை வெறுக்கிறார்களெனினும், தற்போது வியன்னாவிலிருக்கிற பொதுஜன அபிப்பிராயமானது, அரசாட்சிக் கட்டை யறுத்தெறிந்துவிட்டு, ஜீக்ஸ்லோவாகிய வகுப்பை யுள்ளே தாராளமாய்ப்புகவிட்டு, ஆதிக்கத்தை மேற்கொள்ளும்படியாக விட்டுவிட வேண்டுமென்பதாக இருக்கின்றது. ஆஸ்திரியர், ஜர்மனியரோடு ஒத்துழைக்க விரும்பினாலும், பிரான்ஸு முதலியவற்றினுடைய நிர்ப்பந்தத்தினால் தங்கள் வடபுலத் தயலவருடன் ஒத்துழைக்கச்

செய்யப்பட்டிருக்கிறார்கள். பல வழிகளிலும் இந்த ஒத்துழைப்பு நிலைமையை உயர்த்தும்; ஏனெனில், ஒரு நிலைத்த நாணய வழக்கை யடையக்கூடும். ஜிக்ஸ்லோவாகியாவுடன் ஒத்துழைப்பானது, அதிக சுதந்தரத்துடன் கூடிய பொருளாதாரத் திட்டத்தைத் தரும். ஏனெனில், ஆஸ்திரியாவிலுள்ள பல தொழிற்சாலைகளும் பண்டகசாலைகளும் அவசியமான நிலக்கரிச்சாலைகளும் மற்றுமுண்டான மூலப்பொருள்களும் அந்த ஜிக்ஸ்லோவாகியா விடமேயிருக்கின்றன.

ஜர்மன் அரசாங்கமானது, அடிக்கடி தொடர்ந்து, தாழ்ந்த நிலைமைக்குத் தள்ளப்படுகிறபடியால், அதனது உண்டியல்கடன்களைத் தீர்ப்பதற்காகவே அதிகமாகப் பணம் அடிக்கடி வேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிறது. பெருஞ்சுமையாக ஜர்மனியின்மேல் சுமத்தப்பட்டிருப்பன பரிகார உண்டியல்கடன்களேயாயிருக்கின்றன. இவைகள் பதினைந்து நாட்கட்கு ஒருமுறை ௫00 லட்சம் மார்க்குகள் செலுத்த வேண்டியவைகளாக இருக்கின்றன. ஜர்மன் அரசாங்கமானது, இந்தப் பொறுப்புகளை ராதிநாவின் கொலை பரியந்தம் அநுபவித்தமாக விசுவாசமாகவே நடத்திக்கொண்டிருந்தது. மார்ச்சு வரையில், ஜர்மனியானது, போரை நிறுத்தியது முதல், ௪௭௫,000,000 பவுன்கள் செலுத்தி யிருக்கிறது. எற்கனவே ஜர்மனி செலுத்தியதொகையின் மொத்தமானது ௬௮,௨௪௨,௯௭0,000 தங்க மார்க்குகளாகும்; அல்லது எல்லாவகைச் செல்வும் சேர்ந்ததாக, ௭,௯௪௮,௫௯௪,000 ஆகும்(ஆகஸ்டு-௨௫-தேதி) நாணயமாகவோ வேறு வகையாகவோ இந்தச் செல்களை யெல்லாம் செலுத்துவதன் நிமித்தம், அரசாங்கமானது செலாவணிக் காகிதங்களை ஏராளமாக அச்சடிக்கும்படியாயிற்று. மார்க் நாணயத்தை நன்மை வழியிற் செய்துகொள்ள வேண்டிய சரியான நிலைமைக்கு ஜர்மன் தொழில்கள் வந்துவிடலாம் என்று ஒரு வேளை ராதிநாவுக்கு நினைவிருந்தது. இந்த அளவுக்கு விஞ்சிய அதிகாரக் கடன் நிர்ப்பந்தத்தால், பெருத்த இலாபத்தை யடைந்துவிடலாமென்றும், இந்த ஜர்மனியின் பரிகாரத் தொகையானது பெருந்தொகையைத் தமக்குக்காட்டிவிடுமென்றும், பிரான்ஸும் இங்

விலந்தம் நம்பியிருந்தன. எந்த விதத்திலோ, மார்க் நாணயத்தின் மதிப்பானது முற்றும் இருந்திருமமான விலையுடையதாக ஆகிவிட்டது. இப்படி மார்க் நாணயத்தின் மதிப்பானது அழிக்கப்பட்டபோதும் தற்போது ஜர்மனியின் நிலைமை அந்த அளவுக்கு அதிகக்கஷ்டத்தைப் பெற்றுவிடவில்லையென்றே சொல்லலாம். எனினும் ஜர்மனியின் வரவு செலவுத்திட்டம் கலக்கப்பட்டுப்போய் பரிகாரத் தொகையைச் செலுத்தக்கூடிய சக்தியும், அழிந்துபோன விலப்பரப்புகளைத் திருத்தியமைக்கக் கூடிய தன்மையும் ஜர்மனிக்கு இல்லாமலே போய்விட்டது. மார்க் நாணயத்தின் இந்த விலத்த வீழ்ச்சியினால், தேசத்தின் பொதுக்காரியங்களெல்லாம், அதிகத் தாழ்ச்சிக்கு வந்துவிட்டன. சாதாரண காலங்களில் அரசாங்கத்துக்குப் பெருத்தவருவாய் மூலங்களாக இருந்த இருப்புப்பாதைகளும் தற்போது நஷ்டத்துக்கே காரணங்களாக இருக்கின்றன. அன்றியும் இந்த அரசாங்கத்தில், ஒரு அன்னியன், பிரயாணத்தைச் செய்யும்போது, சொற்பக்கட்டணத்தில் அநுபவிக்கக்கூடிய சுகத்துக்காக ஜர்மனியில் வரிசெலுத்துவோர் அதிகக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஜர்மனியின் உள்நாட்டு நிலைமையானது மிகவும் துக்ககரமானதொரு நிலைமையை யடைந்திருக்கிறது; எப்படியெனில், ஜனங்களெல்லோரும் கலக்கத்தையும் ஏக்கத்தையும் அடைந்திருக்கிறார்கள்; மார்க் நாணயத்தின் மதிப்புக்குறைவால், துன்பப்படும் வகுப்பினர்களே இந்தச்சுமையைத் தாங்கமுடியாமல் வருந்துகிறார்கள். இவர்கள் யாரெனிலோ அறிவு மிகுந்து நடுத்தர வாழ்வையுடைய வகுப்பினர்கள்; இவர்கள் ஓரளவுள்ள வரும்படியும் சாதாரண ஜீவனமும் உடையவர்கள்; ஆனால் இந்த வகுப்பாரையே ஜர்மனிக்கு முதுகந்தண்டு போன்றவர்கள் என்று கூறவேண்டும்; இவர்களே ஜர்மனிக்கு அறிவு வளர்ச்சியைக் கொடுத்தவர்கள். இவர்களுடைய விஞ்ஞான சாஸ்திர அறிவினால்தான், வெளியுலகமானது தற்போது மிகுந்த லாபத்தை யடைந்து கொண்டிருக்கிறது.

ஆஸ்திரியாவிலுள்ள இந்த வகுப்பினர் செலவுக்கில்லா நிர்ப்பந்தத்தால், இன்றைக்கும் மிகப்பசியுடன் வருந்திக்கொண்டிருக்

கிறார்கள். ஏனெனில், அங்கு சென்ற வருஷம் இந்தக் காலத்தில் அவர்கட்கிருந்ததைக் காட்டிலும் இந்த வருஷத்தில் மும்மடங்கு தாழ்ச்சியை யடைந்துகொண்டிருக்கிறார்கள். தற்போதையநிலைமை மாறாமலே இருக்குமானால், அடுத்த மழைகாலத்தில், ஜர்மனிக்கும் இந்த ஆஸ்திரியாவின் நிலைமை ஏற்பட்டுவிடும். குடியானவர்களும் கூலியாளரும் தொழிலாளிகளும், இந்த மார்க்கின் வீழ்ச்சியினால் யாதொரு சங்கடமும் பெறாமல், சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தாலும், நான் மேலே சொல்லிய வகையினர்களாகிய வருஷத்துக்கு ஓரளவுள்ள வரும்படியுள்ள வகையினின்ற, இந்த வீழ்ச்சியானது மிகுந்த கேடான நிலைமைக்குக் கொணர்ந்திருக்கிறது. முடிவாகச் சொல்லப்புகுந்தால், ஒவ்வொரு தேசத்திலும் இப்போது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும், சிக்கெனப்பொருவிதிகள் அமுலுக்கு வருமானால், பரஸ்பரம் பகைமையுடையவர்களும் பகைமையை நீக்கித் தாங்கள் அயலகத்து நேயர்களென்று அறிந்துகொண்டு ஒருவருக்கொருவர் உபகாரிகளாக இருந்து வாழும்படி செய்ய விரும்பி அப்படியிருந்தால்தான் சந்தோஷ வாழ்வு வாழ்ந்திருக்கக்கூடுமென்பதே, எதிர்காலத்தைப்பற்றிய ஒருவனது முடிவான யோசனையாக முடியும்.

முருகன் இசை.

கட்டத் துணியில்லாக் கந்தலுக்குங் காசினியோர்
செட்டி யெனுநாமம் செப்பிடலேன்—பெட்டினுடன்
கட்டியகா ணிக்கைதனைக் காலந்தாழ்த்தே செலுத்தின்
வட்டியுடன் வாங்குதலால் மற்று.

தந்தையொடு தாயிருக்கத் தன்தலையை மொட்டையாய்
எந்தவிதஞ் செய்தான் எழில்முருகன்—அந்தோ
இருமனைவி உள்ளானால் ஏற்றத்தாழ் வெய்தில்
ஒரு குடுமி தீதென்றே ஓர்ந்து.

AR. ஸ்ரீநிவாசமுதலியார், ஆனைமலை.

வைர மோதிரம்.

(தன் சரித்திரத்தைத் தானே சொல்லிக் கொள்ளுதல்.)

(*Autobiography of a Diamond ring.*)

(வாகீச பக்தன் எழுதியது.)

தென்னாப்பிரிக்காதேசத்தில், "கிம்பர்லி" என்னும் இடத்திலுள்ள ஒரு வயிரச் சுரங்கத்தில், நான் கருவுருவாய்க் கிடந்தேன். அச்சுரங்கத்தின் தலைவராகிய "புல்லக்" துரை என்பவர், கருவுருவாய்க் கிடந்த என்னை, ஐரோப்பா கண்டத்திலுள்ள பெல்ஜியம் என்னும் தேசத்திற்கு அனுப்பினர். அங்கு வைர வேலை செய்வதில் தேர்ந்தவராகிய ப்ரைட் துரையவர்கள், எனது கருவுருவைச் சாணையிற் பிடித்துத் தேய்த்து, முப்பத்திரண்டு பட்டைகள் உள்ளதோர் அழகிய வைரக்கல்லாக்கினர். என்னுடைய ஒளியானது, ஆயிரங்கோடி சூரிய கிரணங்களைப்போற் பார்த்து விளங்கியது. பிறகு என்னை அவர் ஒரு அழகிய தாளில் பஞ்சணையில் படுக்க வைத்து, ஒரு பெட்டியில் அடக்கிப் பம்பாய்க்குப் பார்சல் செய்தார். நான் பெல்ஜியத்திலிருந்து புறப்பட்டுக் கப்பலிற் பிரயாணஞ் செய்து கொண்டு, பம்பாய்க்கு வந்து சேர்ந்தேன். அந் நகரத்தில் வைரவியாபாரஞ் செய்துகொண்டிருந்த கோடீஸ்வரராகிய மதன்லால் ஷேட் என்பவர் வீட்டிற்குக் கப்பலிலிருந்து காரில் நேரே அழைத்துச் செல்லப் பெற்றேன். அவர் என்னை ஒரு அழகிய மேஜையின் மீது அமரச்செய்து, பக்கத்தில் இருந்த தரகர்கள் எல்லோரையும் எனக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். என்னுடைய பளபளப்பும் மினுமினுப்பும் அவர்களுடைய கண்களை எல்லாம் பறித்துக்கொண்டு போய்விட்டன. அவர்கள் எல்லோரும் என்னை முப்பதாயிரம் ரூபாய்களுக்குமேலேயே மதிப்பிட்டார்கள். பிறகு, அவர்கள் எல்லோரும் சேர்ந்து என்னை, அந்நகரத்

தில் வசித்துக் கொண்டிருந்த கன்னியாகுமரி மஹாராஜாவாகிய காமநாத பூபதி அவர்களிடம் கொடுத்து முப்பதினாயிரம் ரூபாய்கள் விலை பகர்ந்து, கடைசியாக இருபத்தையாயிரம் ரூபாய்களுக்கு கைமயடித்தார்கள். அந்த மஹாராஜா அவர்கள், என்னை ஷோக் சுந்தரப் பத்தரிடத்திற் கொடுத்து அழகிய தங்கக் கட்டிடத்திற் பதிக்கச் சொன்னார். பத்தரவர்களும் என்னைப் புது மாதிரியில் நன்றாகக் கட்டிக் கொடுத்தார். பிறகு, மஹாராஜா அவர்கள் வாங்கித் தன்னுடைய சுண்டு விரலிலே அணிந்து கொண்டார். மோதிரத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். தன் மனைவியிடம் காட்டினார். பிறகு, அவ்வம்மணியின் திருக்கரங்களில் இட்டுப் பார்த்தார்; தொட்டுப்பார்த்தார். அவர் பெரிய பெரிய திருவிழாக்கள் பரிசளிப்புகள் முதலியவற்றிற்குப் போகும்பொழுதெல்லாம், என்னையும் அழைத்துக்கொண்டு போவார். அப்பொழுது எனது பேரழகையும், என் முகத்தில் ஜ்வலித்துக்கொண்டிருந்த ஒளியையும் கண்டு கண்வைக்காதவர் பாக்கி இல்லை! நான் அந்த மஹாராஜாவினுடைய செல்வக் குமாரனாக வாழ்ந்து வந்தேன். நான் எத்தனையோ மஹாநாடுகளில், மஹாராஜா அவர்கள் அக்கிராசனத்தில் மேடையில் மேஜைமீது அமர்ந்திருக்கின்றேன். நான் காட்டிய அக்கினிவாரக் கல்களுக்கு அளவேயில்லை! நான் அந்த ராஜதானியில் பார்க்காத பெரிய மனிதர்களும், கைகொடுக்காத லேடிமார்களும் இல்லை. பெரிய பெரிய மனிதர்களுடனெல்லாம் கண்டு பேசி இருக்கின்றேன். நூற்றுக் கணக்கான விருந்துகளுக்குச் சென்றிருக்கின்றேன். தங்கத் தமிழர்களோடு கள்ளு குடி சாராயம் எல்லாம் அருந்தி இருக்கிறேன். மஹாராஜா அவர்களிடத்தில் இருக்கும்பொழுது எனக்கு ஒரு குறைச்சலுமில்லை. எல்லாம் பிரமானந்தந்தான். அந்நகரத்தில் டால் சுப்பம்மாள் என்று ஒரு பொதுமகள் இருந்தாள். அவளுக்கு வயது பதின்மூன்றுதான் இருக்கும். அவளுக்குச்சாந்தி முகூர்த்தம் நடைபெற்ற பொழுது, மஹாராஜா அவர்கள் என்னை அவளிடத்தில் ஒப்புவித்தார்கள். அந்த அம்மாள் ஷோக்கான அம்மாள். என்னை

அவன் பெற்றதின் முகூர்த்தமாக அவளுக்கு நல்ல வரும்படி கிடைத்துக்கொண்டு இருந்தது. தினந்தோறும் அவளுடைய வீட்டிற்கு மஹாராஜாக்களும் ஜமீன்தார்களும் மிட்டாதார்களும், மிராசுதார்களும் செல்வத்திற் சிறந்த சீமான்களும், அவர்களுடைய பச்சிளங் கன்றுகளாகிய செல்வச் சீராளர்களும் பலர் வந்து வந்து உண்டு. அந்த அம்மாளுடன் எல்லோரும் ஒன்றாக இருந்து கொண்டு சீட்டு சொக்கட்டான் போடுவார்கள். அப்பொழுது என் கையாற் குட்டுப்பட்டவர்கள் பலருளர்; அங்கே நமது பரங்கிப் பழத் தம்பிரான் அவர்களையும் திருக்கள்ளூர்ப் பண்டார சந்நிதிகளையும் நான் பன்முறை சந்தித்திருக்கிறேன். தாடிச் சாமியார் அவர்களும் சில சமயங்களில் வருவதுண்டு. அவர்களெல்லாரும் எனக்கு நிரம்பப் பழக்க முடையவர்கள். நான் குஷியில் அவர்களுடைய சடைகளையும் தாடிகளையும் காதுகளையும் பன்முறைபிடித்திழுத்திருக்கிறேன். எத்தனையோமஹாராஜர்க்கன் பிரபுக்களுடைய கன்னம் சிவக்க அறைந்திருக்கிறேன். மற்றும் ஒன்றுந் தெரியாத சிறுபிள்ளைகள் பலர் வீட்டிலுள்ள வைரநகை சிவப்பு நகைகளைத் தங்கள் பெற்றோருக்குத் தெரியாமல் திருடிக் கொண்டு அங்கே என்னோடு விளையாட வருவார்கள்; அவர்களுக்கு நான் மாம்பழம் பசுவின் பால் தேன் எல்லாங்கொடுத்து மகிழ்விப்பதுவழக்கம். கூனி நரைத்துத் திரைத்த கிழப்பழங்களும் வருவதுண்டு. பல்லில்லாத அவர்களுக்கு வெற்றிலை யிடித்துக்கொடுத்திருக்கிறேன். உடலைத் தடவிப் பணம் வாங்கிக்கொண்டு வழியனுப்பி யிருக்கின்றேன். நாணயமான உத்தியோகஸ்தர் பலரும் வருவார்கள். அவர்களுடன் வெகுவாக சல்லாபித்திருக்கிறேன். இப்படி உலகிலுள்ள எல்லாத்துறைகளிலுள்ளவரும் என்னைவிரும்பும்போது எனக்கு இவ்வுலகில் குறையிருக்குமோ? இல்லவேயில்லை. கவலையில்லை. வருத்தமில்லை. சலிப்பில்லை. எப்பொழுதும் இன்பமயமாகவே வாழ்ந்தேன். இப்படியாக, அந்த அம்மாளுக்குக் குஞ்சரம் என்றொரு பெண். அந்நகரத்தில் நடைபெற்ற திருவிழாவன்று, அப்பெண்ணின்கையில் என்னை இட்டுக்கொண்டு திருவிழாக் கடைக்குப்போனார்கள். அப்பொழுது திருடனிதில்

பெயர்பெற்ற "ஜம்புநாதன்" என்பவன், அந்தக் குழந்தையின்
கையிலிருந்து என்னைக் கழற்றிக்கொண்டு போய்விட்டான். அவன்
என்னைக் கொஞ்சம் நாட்களிருந்தபின் எனக்குப் புதுப்பிறப்புக்
கொடுத்து (பிரித்துக்கட்டி) கொங்கம்பட்டியிலுள்ள அரசாங்க
உத்தியோகஸ்தரிடம் பெருமதிப்புப்பெற்ற அமிர்தலிங்கம் பிள்ளை
காசுக்கடையில் ஆயிரம் ரூபாவென்று விலை தெளித்து விற்றுவிட்
டான். அவர் லக்ஷக்கணக்காக வைர வியாபாரஞ் செய்பவர்.
அவர் என்னை அவ்வூரிலுள்ள பகல் பகதூர் கொங்கம்பட்டி ஜமீன்
தாரவர்களிடம் இருபதினாயிரம் ரூபாய் விலை பெற்றுக்கொண்டு
கொடுத்துவிட்டார். அந்த ஜமீன்தாரவர்கள் மிகத்தாராளமானவர்
கள். அவர்களுடைய பாட்டனாரவர்கள், தம்முடைய நெற்றி
வேர்வை நிலத்தில் விழக் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்து
வைத்திருந்த பணத்தையெல்லாம் கண்களை மூடிக்கொண்டு செல
வழிப்பவர்கள். யாராவது அவர்களிடத்தில் வந்து, அவர்களைப்
பற்றிப் புகழ்ச்சியாகச் சில வார்த்தைகள் சொன்னாற் போதும்!
ஆயிரக் கணக்காக அள்ளிக் கொடுத்து விடுவார்கள். அவர்களு
டையவீட்டில் சதா விருந்துகளும் கச்சேரிகளும் நடந்துகொண்டே
யிருக்கும். துரைமார்களும் துரைசானிகளும் வந்துகொண்டே
யிருப்பார்கள். எல்லோரும் ஒன்றாகக் குடித்துவிட்டுக் கூத்தாடு
வார்கள். நானும் அவர்களோடு ஆடுவேன். அத்துரைசானிக
ளோடெல்லாம் சிட்டுப்போடுவேன். எல்லாம் ஷோக்குத்தான்.
அந்த ஜமீன்தாரவர்களிடத்தில் இருக்கும்பொழுது எனக்கு அதி
கச் செல்வாக்கு இருந்தது. ஒரு குடியைக் கெடுக்க வேண்டுமா
னாலும், கெடுக்கலாம், வாழவைக்க வேண்டுமானாலும் வாழ வைக்
கலாம். எல்லாம் என்னுடைய கையிலேயே இருந்தது. என்
னால் அடிபட்டவர் எத்தனைபெயர்? அறைபட்டவர் எத்தனைபெயர்?
அளவேயில்லை! அவைகளை யெல்லாம் நினைத்துப் பார்த்தால்,
இப்பொழுது வருத்தமாகத்தான் இருக்கிறது. ஒரு பத்து வரு
ஷங்களுக்குள் ஜமீன்தாரவர்கள் கண்ணுக்குத் தலைதெரியாமல்
ஆடினார்கள். பிறகு, "டோஸ்" என்று ஜமீன்தாரவர்களுடைய
சம்பமெல்லாம் வெளுத்துப் போய்விட்டன. கடன் தலைக்கு

மேற் போய்விட்டது. கைகொடுத்த லாடுகள், லேடிகள், வேசிகள், சிமான்கள் உற்றார் உறவினர் எல்லோரும் பறந்து போய்விட்டார்கள். சாராயக்கடைக்காரர், ஐயாயிரம் ரூபாய்களுக்கு அவருடைய வீட்டை ஜப்தி செய்துவிட்டார். அப்பொழுது ஜமீன்தாரவர்கள் தாம் கொடுக்க வேண்டிய கடனுக்காக என்னை அவ்வூர்க் கோவிந்தன் செட்டியாரவர்களிடம் பதினையாயிரம் ரூபாய்களுக்குக் கொடுத்துவிட்டார். அந்தச் செட்டியார் மிக நல்லவர். பெரிய தர்மப்பிரபு. அவர் கையில் இருக்கும் பொழுது நான் செய்த தர்மங்களுக்கு அளவே இல்லை! அவர் எப்பொழுதும் நல்ல காரியங்களையே செய்து கொண்டிருப்பார். அவரோடு இருக்கும்பொழுது நான் காசி இராமேஸ்வரம் முதலிய சிவ ஸ்தலங்களுக்கெல்லாம் சென்று தீர்த்தமாடியிருக்கின்றேன். இத்தகைய புண்ணிய புருஷருக்கு ஒரு க்ஷேத்ரசன் சுவீகார புத்திரனாக வந்து சேர்ந்தான். அவன் நூறு குடியைக் கெடுக்க வந்த ஒருபிள்ளை. கள்ளுங்கஞ்சா,அபின், சாராயம் முதலியவைகள் தான் அவனுடைய முக்கிய சிநேகிதர்கள். புண்ணை ஈ மொய்ப்பது போல் அந்த மஹாநுபாவனைச் சுற்றி எப்பொழுதும் நாலு காலிகள் இருப்பார்கள். இத்தனைக்கும் அவனுக்கு வயது பதினைந்துதான். கோவிந்தன் செட்டியாரவர்களுக்கு வயது ஆகிவிட்டபடியால், எல்லா அதிகாரங்களும் அவனுடைய கைக்குவந்துவிட்டன. நானும் அவனுடைய திருக்கரங்களை யடைந்தேன். அவன் தன்னுடைய பெயருக்கேற்றவாறு ஒன்றுக்குங் கட்டுப்படாத காளங்கன்றாக ஊர்க்காலி மாடுகளோடேயே சுற்றிக்கொண்டு திரிந்தான். அவனோடு சேர்ந்து கடப்புத்தார் வைத்து மாடு விரட்டினேன்; மஞ்சிவிரட்டிற்குப் போனேன். கார் ஓட்டினேன்; கடற்கரையில் கை கோத்து விளையாடினேன். எப்பொழுதும் அவனோடு இருந்தாற் போதும்! ஷோக்காகப் பொழுது போய்விடும். அவனை அடுத்தவர்களுக்கு ஒரு குறைச்சலும் கிடையாது. மூன்று வேளையும் முப்பழமும் சாதமுமாக மூக்குப் பிடிக்க நன்றாகச் சாப்பிடலாம். சுகத்துக்குச் சுகம். அரைக்காசு செலவு இல்லை! நல்ல சரிகை வேஷ்டிகள் அணிந்து கொள்ள

லாம். நித்தியம் காபி ஹோட்டலுக்குப் போகலாம்; பந்துப் பெயர்களோடு கூடி ஆடலாம்; பாடலாம்; ஆனந்தம் அநுபவிக்கலாம். அப்படிச் சுகமாக இனி ஒருவரும் இருக்க முடியாது. அவனிடத்தில் ஒருநாளும் பணமுடையில்லை. எழுதிக் கொடுக்கிற கடதாசிகள் எல்லாம் பறக்கும்.

ஒருநாள் நானும் அவனுமாக ரேக்ளா வண்டியைப் பூட்டிக் கொண்டு குன்றக்குடிக்குச் சென்றோம். சண்பகத்தம்மாள் வீட்டிற்குப் போனோம். அவன் என்னை அந்த அம்மாளிடத்தில் வைத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டான். நான் அந்த அம்மாளிடம் சிலகாலம் இருந்தேன். பிறகு அந்த அம்மாள் என்னை இட்டுக்கொண்டு வெகு சவுடாலாக வைரவன்பட்டித் திருவிழாவிற்குச் சென்றார்கள். வழியில் ஒரு திருடன் வந்து, "பளீர்" என்று ஒரு அறை கொடுத்து விட்டு, என்னைப் பறித்துக் கொண்டு வெகு வேகமாக ஓடினான். ஓடும்பொழுது, பாதையிலிருந்த கிணற்றிற்குள் விழுந்து, பாதாள லோகப்ராப்தியடைந்து விட்டான். நானும் மண்ணோடு மண்ணாய்க் கல்லோடு கல்லாய்ப் போய்ச்சேர்ந்தேன். என்னுடைய வாழ்வுதாழ்வெல்லாம் சொற்பகாலந்தான். அதற்குள் என்ன ஆட்டம்! என்ன ரோல்புரட்டு! எத்தனை அம்மாள்கள்! எத்தனை ஐயாக்கள்! எத்தனை பிள்ளை குட்டிகள். எவ்வளவு அக்ரமங்கள்! என்ன டமாஷ்! இப்பொழுது எப்படி இருக்கின்றேன். பாழுங் கிணற்றிற்குள் அமிழ்த்தப் பெற்றிருக்கின்றேன். ஏன்? என்னை வைத்திருந்தவர்கள் செய்தருளிய அக்ரமங்களுக்கு நானும் உதவியாக உடன்பட்டு இருந்தபடியினாலேயே. ஆ! ஆ!! நான் முன்னே இருந்த நிலை என்ன? இப்பொழுது இருக்கும் நிலை என்ன? முன் உயர்ந்த ராஜ போகத்தையன்றோ துய்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு அழகாக இருந்தேன்! என்ன காந்தி! என்னைக் கண்ட உலகத்து மக்கள் எல்லோரும் கிறு கிறு என்று சுற்றிக் கீழே காலில் வந்து விழும்படியாகவன்றோ இருந்தது! என்ன டால்! என்ன ஜிலுஜிலுப்பு! அப்படியே அள்ளிக் கொண்டு போகுமன்றோ? என்னுடைய பிறப்பு வளர்ப்பு எல்லாம் சாதாரணமானவைகளா? எனது குலத்திற்கு நான் ஒரு திலகனாகவன்றோ விளங்கினேன்.

தென்னாப்பிரிக்காவிற் கருவுற்றேன். பெல்ஜியத்திற் பண்பட்டேன். பம்பாய்க்கு வளர வந்தேன். வளர வந்த இடத்தில் வேசி விட்டிற்குப் போனேன். கள்வன் கையில் அகப்பட்டேன்; காசுக் கடைக்கு வந்தேன்; ஜமீந்தாரவர்களை அடுத்தேன்; செட்டியாரவர்களைச் சேர்ந்தேன்; அவர்கள் திருக்குமாரரை அடைந்தேன்; சண்பகத்தாயாரைச் சார்ந்தேன்; மறுபடியும் திருடன் கையில் அகப்பட்டேன். பாழுங் கிணற்றில் விழுந்து கிடக்கின்றேன். சீ! சீ! இதென்ன வாழ்க்கை! இப்போது இந்தப் பாழுங் கிணற்றில் கிடக்குங் கற்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்! இந்த உலகத்தில் மனிதரிடம் சென்றால்தான் இல்லாத பேதமெல்லாம் உண்டாகின்றன. என்னை உலகத்திலில்லாத பொருளென்று சொன்னார்கள். என்னைத் தாங்கிச் சுமந்தார்கள். நானும் இந்தக் கௌரவம் என்ற மாயையில் அகப்பட்டு அறிவிழந்து, "என்னை விட உயர்ந்த பொருள் இல்லவே யில்லை" யென்று இறுமாந்திருந்தேன். இப்போது என்கதி அதோகதியாகிவிட்டது. "கஷ்டம் வந்தால் கடவுளை நினைப்பார்கள்" என்றபடி நான் கடவுளைக் குறித்துத் தவங்கிடந்தேன். "எனக்கு அழியாத பதந்தர வேண்டும் ஆண்டவனே! அழிந்து போகிற வாழ்க்கை யெனக்கு வேண்டாம்" என்று இரவு பகலாகத் துதித்துக் கொண்டிருந்தேன். இப்படியிருக்கும்போது ஒரு சாமியார் அந்த வழியாக வந்தார். சித்திரை மாத வெயில் நன்றாகக் கொளுத்தியது. வேறு தண்ணீர் கிடையாது. சுவாமியார் கஷ்டப்பட்டுச் செல்லும் போது நான் விழுந்து கிடந்த கிணற்றைப் பார்த்தார்; தண்ணீரில்லை. மிகவு நொந்து அடுத்துள்ள ஊருக்குச் சென்று நடுக்காட்டிலுள்ள இந்தக் கிணற்றை வெட்டினால் பொதுஜனங்கட்கு உபகாரமாயிருக்குமென்றெண்ணி யாசகம் வாங்கி ஒரு கூலியாளைச் சேர்த்துக்கொண்டு வந்து இந்தக் கிணற்றை வெட்டினார். நான் அவரிடமகப்பட்டேன். "இழிந்த மாந்தர்கைப் பொருள்களும் இகபரத்தாசை, கழிந்த போகியர் கைப்படில் தூயவாய்க் களங்கம் ஒழிந்தவாறு போல்" நானும் பரிசுத்தமடைந்தேன். அப் பெரியார் என்னை ஆலவாயுடையார் திருவிரலில் அணிவித்தனர். என்னே யான் பெற்றபேறு! இஃதியார் பெறுகிற்பார்?

அசுத்த போஜனம்.

உலகில் மக்களாய் ஜனித்தோருக்கு அவரவர் தேசம், தேகம், ஆசாரம், குலவொழுக்கம், சீதோஷ்ணநிலை முதலியவற்றிற்கேற்ப, அவரவர்களின் போஜனவகைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. நாம் வசிக்கும் சென்னை மகாணத்திலேயே பச்சை அரிசியையே முக்கியமாகக்கொள்வார் பலர். புழுங்கல் அரிசியையே கொள்வார் பலர். கம்புங் கேழ்வரகும் சேர்ந்த கூழையே கொள்வார் சிலர். இவ்விரண்டாலாய களியையே கொள்வார் சிலர். அரிசிக்கஞ்சியை யேகொள்வார்சிலர். கோதுமையையேரொட்டியாகவும் இதரபாகங் களாகவும் கொள்வார்சிலர். சில விடங்களில் பகலில் சமைத்த சாதத்தையே ஜலம்விட்டு வைத்து, அந்த ஜலசம்பந்தமான பழஞ் சாதத்தையே இரவில் கொள்வாருமுளர். இவர்களுக்கு, இரவில் புதிய குடுள்ள சாதம் தேகத்திற்குப் பொருந்துவதில்லையாம். இப் படிப் பலவித பேதங்களாய் அமைந்துள்ள சகல ஆகாரங்களும் ஊன்றிக் கவனிக்குங்கால், சாகபக்ஷண வஸ்துக்களாகவே இருப் பதுடன் அவரவர் தேக, தேச, ஜீரணத்திற்குத்தக்கபடியும் அமைக் கப்பட்டிருப்பதும் நன்குபுலனும். இவற்றை ஆதாரமாகக்கொண்டு நமது தமிழ்நாட்டின் தேசாசார, ஜீரண, வழக்க ஒழுக்கங்களையும் அடுத்தடுத்து நமதுகுடும்பங்களில் வாரந்தோறும், பக்ஷந்தோறும், மாதந்தோறும், அயனந்தோறும், வருடந்தோறும் வரும் உபவாச விரதங்களையும், பெண் மக்களுக்கென்றே ஏற்பட்டுள்ள நோன்பு களையும், பிதுர் தின விரதங்களையும், சைவ வைணவ சமயாச்சாரி யர்களின் நக்ஷத்திரங்களையும், சரிவரக் கவனித்து அவ்வழியே ஒழுகுவோர்க்கு வருடத்தின் எல்லா நாட்களும் சுப தினங்களாக வும் சுத்த நாட்களாகவும், அமைந்திருப்பது மிக ஆச்சரியமாகவும் நமது முன்னோர்களின் ஆத்மசக்தியின் விசேஷமுயற்சியின் உலக நலங்கருதிய பலனாகவும் தோற்றலாம்.

இத்தகைய நாட்டில், சத்துவகுண வம்சத்தில், சதாசார வழியில், பெரியார் பரம்பரையில்வந்த நமது குடும்பங்களின் ஆகா ரம் எவ்வளவு மேன்மையானதாவும், பரிசுத்தமுள்ளதாகவும், தேவா ராதனைக்கு யோக்யமுள்ளதாகவும், அதிதிபூஜைக்கும் அடியார்

இச்சைக்கும் ஏற்றதாகவும் இருந்திருக்கவேண்டுமெனநாமேசற்று யோசிக்கச்சந்தேகமின்றித்தெளிவாகலாம். இவ்வளவுவைதிமார்க் கவழிச்சந்ததிகளாகிய நமது தேசவாசிகளிற் சிலகுடும்பங்களின் ஆகாரம் தற்காலம் இருப்பதைக்காணக் கேழ்க்க, உண்டாகும்வருத் தத்திற்களவேயில்லை. தேக தத்துவ ஆராய்ச்சிக்காரர்கள் மனி தனின் பற்களைக்கொண்டே, மனித தேக அமைப்பு சாகபக்ஷணத் திற்கே உரியதெனத் திட்டமாய்ச் சொல்லுகின்றனர். மாமிச பக்ஷணிகளாகிய, புலி, சிறுத்தை, நாய், பூனை முதலிய ஜெந்துக் களின் பற்களுக்கும், சாகபக்ஷணிகளாகிய பசு, ஆடு, குதிரை முத லியவற்றின் பற்களுக்கும் உள்ள வித்தியாசத்தையும் திருஷ்டாந் தங்காட்டி விலக்கியிருப்பது கவனிக்கத்தக்கது. மாம்ஸ பட் சணிகளின் பற்கள் இதர ஜீவன்களின் தோலைக்கிழிக் கவும், எலும்பைக் கடிக்கவும், உதிரத்தை உறிஞ்சவும், மாமிசத் தை மெல்லவும், தக்கவாறு நீளமாய்க் கடுமையாய், வளைவாய் முனை கூர்மையாய், உறுதியாய், அடிகனத்ததாய், சிக்கிரம்தேய்வு படாததாய், ஏற்றத் தாழ்வாய்ச், சரிவரிசையில்லாததாய், இடை யிடையே விசாலமான இடைவெளியுள்ளதாய், மேல்வரிசைக்கும் கீழ்வரிசைக்கும் பொருத்தமற்றதாய்த், தூர்க்கந்தம் வீசுவதாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. சாகபக்ஷணிகளான ஜெந்துக்களின் பற்கள் இதற்கு நேர்மாறாகக் காணப்படுகின்றன. இவற்றிற் கேற்க அதனதன் ஆகார வகைகளைச் சரிவரப் பிசைந்து, ஜீரணிக் கச் செய்யத் தக்கவாறு இரைப்பைகளும், பிற உள்ளுறுப்புக்க ளும் பொருந்தியிருப்பதை நாம் நன்கு காணலாம். இந்த வகை களிரண்டில், மனிதனின் பற்கள் சாகபக்ஷணத்திற் கேற்றவாறே அமைந்திருக்கப் பெற்றிருக்கின்றன. இரைப்பையும் இவ்வாறே யென்பதில் சந்தேகமில்லை. இப்படிக் கடவுளாலேயே, சாகபக்ஷ ணத்திற்கென்றே, பிறப்பிக்கப்பட்ட மனிதன் இதற்கு மாறாக, சாஸ்திர விரோதமாக், ஜீரணக் கருவிகளுக்குப் பொருத்தமற்ற தாகத், தேகதத்துவ நாடி அமைப்புக்களுக்கு முரணாக, மச்சம், பறவை, விலங்குகளின் மாமிசங்களைத் தங்கள் மாமிசங்கள் போன்றதே என்ற அருவருப்பும், அசங்கதமும், இரக்கமும்,

ஜீவகாருண்யமும் இல்லாமல், அவற்றைப் பதைக்கப் பதைக்கத், துடி துடிக்கக், கதறிப்பதற, ஆவிசோர, அயர்ந்துவிழ, அபயமிட்டலற, "எங்களை இக்கோலமாக்குவோர் குடும்பமும் நாளடைவில் இக்கோலமேயாக" வென்று அச்சிவன்கள் உள்ளங்கலங்கிக்கெழுங் கவலையுடன் கண்ணீர் சிந்த, வதைத்தோ வதைப்பித்தோ தின்னலும் தின்னச் செய்தலும், முற்றும் வைத்திய சாஸ்திர விரோதமும் வெறுக்கத் தக்கனவுமாவதுடன் அநேக வியாதிகளுக்கும் எருவிட்டுப் பூமியைப் பண்படுத்தி வைப்பதுபோலச் சந்ததிசந்ததிகளாகப்பல அஜீரண வியாதிகளுக்கும் வாயுரோகங்களுக்கும், தொந்த பூர்வகன்ம பிணிகளுக்கும் அடிகோலுவதேயாகும்.

சில தேகிகளுக்கு மாமிச பக்ஷணம் ஜீரணமாகிப் பொருந்துகின்றதேயெனின், சிறுத்தைப் புலியும், சர்க்கஸ் ஆட்டக்காரனால், புல் தின்னவும், பால், பழம் முதலிய அருந்தவும் கட்டாயமாய் வற்புறுத்திப் பழக்கப் பட்டிருப்பதேபோல் அதன் பிறவிக் குணத்திற்கும் இந்த ஆகாரத்திற்கும், எவ்வளவு பொருத்தமோ அவ்வளவுதான் தமிழ் நாட்டு மக்களுக்கும் மாமிச ஆகாரத்திற்கும் உள்ள பொருத்தமும். புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. மற்ற நாட்டிலுள்ள மனிதர்களுக்கும், தமிழ் நாட்டிலுள்ள மனிதர்களுக்கும் உள்ள தேச நிலை, தேக நிலை, ஜீரணக் கருவிகளின் அளவு நிலை, சாடராக்கினியின் அமைப்பு நிலை இவற்றின் பேதா பேதங்களே நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள். ஆக இந்த போஜனக் கிரமம் சைவ வைணவ சமயங்களிற் ஜனித்த சுத்தாச்சார வம்சங்களுக்கே (சில நெறி தவறியவர்களுக்காக) ஞாபகப்படுத்துவ தொன்றாகும். மாமிச போஜனத்திற்கே அசுத்த போஜனமென்று சொல்லுவது நமது நாட்டு வழக்கம். அசுத்த போஜனத்தால் ஜீரணக் கருவி கெட்டு, மந்தமேற்பட்டு, மந்தத்தினால் வாயு ரோகம் ஜனித்து, முற்றிப் படர்ந்து சந்ததிகளையும் தொடர்ந்து, மீளா அவஸ்தைக்கு ஆளாக்குவதை அறிந்து, ஜீவகாருண்யமற்ற இக்கொடுஞ் செயலை நீக்குவதே தருமங்களிற் சிறந்ததாம்.

அ. வேங்கடாசல முதலியார்,
ஆயுர்வேத வைத்தியர், திருவண்ணாமலை.

பழமொழிக் களஞ்சியம்.

(முதுமொழிக்காஞ்சியார் எழுதியது.)

பெருங் காரியங்களில் தலையிட்டு நிற்கும் நண்பர்கட்குப் பொறுமைக் குணம் அதிகமாக வேண்டும். வருஷ முழுமையும் பொறுமையோடிருந்து விட்டுச் சமயத்தில் பொறுமையை இழந்தால் காரியங்கள் அப்படியே பாழ்பட்டுப் போய்விடும். ஊழியம் புரிவோருக்குப் பொறுமையே பூஷணமாகும். சொல்லுமுன் திருந்தக் கூடிய ஜனங்களாக விருந்தால் சொல்வதற்கு சில திருத்தக்காரப் புலிகள் தேவையில்லை. அறியாமை நிறைந்து அகங்காரம் மிகுந்து வாழ வழி தெரியாமல் தவிக்கும் ஜனங்களிடம் கொஞ்ச நாட்களுக்குப் பொறுமை காட்டினால் போதாது. பொறுமையோடு உழைக்காமையாலேயே பலகாரியங்கள் அழிந்து போகின்றன. "ஆக்கப் பொறுத்தவன் ஆறப்பொறுக்க வேண்டும்."

* * *

உலகத்தில் சில வௌவால் பேர்வழிகள் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் சண்டை நடந்தது. முதல் நாள் மிருகங்கள் ஜெயித்தன. அன்று அவைகளிடம் வௌவால் சென்று, "எனக்குப் பல் இருக்கிறது. பக்ஷிகளுக்குப் பல்லுண்டா? ஆதலால் நான் மிருகந்தான்" என்று சொல்லி உறவு கொண்டாடியது. மறுநாள் யுத்தத்தில் பக்ஷிகள் ஜெயித்தன. அன்று அங்கே சென்று "நான் பறக்கமுடியும். மிருகம் எங்காவது பறக்கிறதுண்டா?" என்று சொல்லி உறவு கொண்டாடப் பார்த்தது. ஆனால் நடுநிலையிலிருந்த மக்கள் என்ன சொன்னார்கள்? தெரியுமா? இந்தத் திருட்டு வௌவால் யுத்தத்தில் ஒரு கட்சியிலும் கலவாமல் அந்தரத்தில் நின்று கொண்டு வெற்றியான பக்கத்திற் போய் உறவு கொண்டாடுகிறது. இது ஒரு அயோக்கியத் தனமென்று தீர்மானித்து விட்டார்கள். அதனால் வௌவால் வெட்கப்பட்டுப் பகலில் வெளிவருகிறதில்லை. இந்த மாதிரித் தலைவர்களும் மனிதர்களிலிருக்கிறார்கள். மக்களாகப் பிறந்து தேசியக் கட்சியாரென்று சொல்லிக் கொண்டு ஆளுக்குத் தக்கபடி கும்பிடு போடுகிறார்கள். உத்தியோகஸ்தரைக் கண்டால் ஒன்று. மற்றவிடத்தில் வேறொன்று! என்ன

செய்கிறது? மனிதன் வயிற்றுக்கடிமைப்பட்டுப் பொய்மயமாகப் போய்விடுகிறான். பாவம்! மாயை வயப்பட்ட மனிதன் வேறென்ன செய்ய முடியும்? "ஆண்டியைக் கண்டால் லிங்கன் தாதனைக் கண்டால் ரங்கன்"

* * *

சென்னை மாகாணத்திலே சுயகாரியப் புலிகள் சிலருண்டு. அவர்கள் காட்டுகிற ஜகஜாலப்புரட்டுகளால் சில ஜனங்கள் அவர்களைத் தலைவரென்றெண்ணித் தடுமாறுகிறார்கள். வடநாட்டிலே திலகரும் காந்தியும் சிறந்த தலைவர்களானார்கள். தாஸும் நேருவும் தலைவர்களானார்கள். தென்னாட்டில் சில பஞ்சாங்கர்கள் தலைவராக வேண்டுமென்று முட்டிக்கொள்கின்றனர். அதற்காக உலகமெல்லாம் போற்றுகிற கொள்கைகளை மறுக்க முயல்கின்றனர். முடியுமோ? பிறருடைய கொள்கை தப்பென்று சொல்லிப் பெயர் வாங்கிவிட்டால் தலைவராகிவிடலாமென்பது பேதைமைதான். என்னபல்டி யடித்தாலும் எத்தனை கஜகர்ணம் போட்டாலும் தமிழ் நாட்டு மக்கள் இப்போது ஏமாந்து நிற்கமாட்டார்கள். இந்தத் தலைமைப் பயித்தியங் கொண்டவர்கள் ஏதாவது வயிற்றுப்பாட்டைப் பார்த்துக் கொண்டு கிடப்பது நல்லது. தலைமைஸ்தானம் பிறப்பிலேயே வரவேண்டும். ஒருவரை யொருவர் ஏமாற்றுவதாலும் பொறாமைப் படுவதாலும் அது வரமாட்டாது. "உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?"

* * *

பொது நல ஊழியத்திற் புகுந்தவர்கள் சுய நலத்தில் இச்சை வைத்தால் அதோடு தொலைந்து போவார்கள். சில ஆசாமிகள் "மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசை" யென்றபடி பொது ஊழியம் புரிகிறார்கள். ஆனால் உள்ளே சுயநலம் ததும்புகிறது. இதனாலும் பல முயற்சிகள் அழிந்து போகின்றன. கௌரவம் கிடைக்கிறவரை சந்தோஷமாக முன் நிற்கிறார்கள். கஷ்டம் வருகிறபோது ஓடிப்பதுங்கப் பார்க்கிறார்கள். உண்மையாகப் பிறர்க்குப் பாடுபடுவதென்று முன்வந்து விட்டால்—சுயநலப் புத்தி தொலைந்து விட்டால்—அவன் வாழ்வு இன்பமயமாகி விடுகிறது. அவனையறியாமலேயே அவனுடைய காரியங்கள் நடைபெறுகின்றன. பரிசுத்தமான மனதோடு பொதுஜன நலம் நாடி யுழைக்கு மொருவன் மனமானது இன்பக்கடலாடும். அவன் துன்பமடைவதே கிடையாது. பிறருடைய பிள்ளை குட்டிகளைத் தன்னுடையதென்று கருதும் பெருங்குணம் வரவே உலகத்தார் இவனுக்கு எந்த வழியிலும் துன்பம் வரப்பொறுக்கமாட்டார்கள். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்."

சதங்கை யொலி.

பயனுள்ள முயற்சி.

எந்த முயற்சி செய்யினும் நீண்டநாள்கட்குப் பயன் தரும்படியாக விருத்தல் வேண்டும். அப்படி முயற்சி செய்வார் உலகிற் சிலரே இருக்கின்றனர். சந்தர்ப்பம் நோக்கிப் படபடப்பாகச் செய்கிற முயற்சியில் பலர் சேர்வதும், அவ்வளவோடு திருப்தியுற்று விடுவதும் சாதாரணமாகிவிட்டன. தமிழ்நாட்டில் உறுதியான மக்கள்—அச்சத்தை அறவேவிட்ட மக்கள்—நேர்மைக் குணமுடைய மக்கள் அதிகமில்லாமையால்தான், உலகினரின் முன்னர்த் தமிழ்நாடு வீழ்ந்துகிடக்கிறது. இதைப் பரிகரிக்கப் பலர் மேற்பூச்சுப் பூசுகின்றனர்; இந்த நிலையைச் சல்லிவேரோடு கல்லியெடுத்துத் தமிழ்நாட்டு மக்களை மனிதக்குணமுடைய மக்களாக்கும் முயற்சியில் ஸ்ரீமான் வ. வெ. ஸு. ஐயரவர்கள் முயல்வதுகண்டு மகிழ்வெய்துகிறோம். இயற்கை இன்பம் ஊறும் கல்லிடைக்குறிச்சியில் பழைய ரிஷீஸ்வரர்களின் முறையை உள்ளே பொதிந்துள்ள குருகுல வித்தியாலயம் ஒன்றை ஏற்படுத்தி இந்திய இளங்கன்றுகளின் உடலையும் அறிவையும் ஒருசேர வளர்க்க முன்னிற்கிறார்கள். பொறுமையுஞ் சாந்தமும் நேர்மையான குணமும் அஞ்சாநெஞ்சமும் சமயம் பாஷை தேசம் ஆகியவற்றில் அபிமானமும் ஒருங்குள்ள உண்மைத் தமிழ்ச் செல்வர் நமது வ. வெ. ஸு ஐயரவர். இவர்களது முயற்சிக்குத் தமிழ் மக்கள் யாவரும் பொருள் கொடுத்துதவுதல் கடமையாகும்.

ரப்பர்.

முப்பதினின்ற ரப்பர் விலை ஐம்பதுக்கு மேலேறவே பலர் மகிழ்வடைந்தனர் இது பயனற்ற மகிழ்ச்சி யென்பதைச் சென்ற மாதம் குறிப்பிட்டோம். நிற்க, "மலாய் நாட்டில் உள்ள ஒவ்வொரு தோட்டக்காரரும் தங்கள் தோட்டத்தில் எவ்வளவு ரப்பர் வருவது முழுமையும் எடுக்கப்படுகிறதென்று விளக்கமாக எழுதி ஜில்லா அதிகாரிக்கு மனுச் செய்து லைசென்ஸ் பெறவேண்டுமென்றும், எடுபடுகிற ரப்பரில் ௧௦௦-க்கு அறுபது பங்குக்கு மேற் போகாமல் அந்த நாட்டைவிட்டு வெளியே அனுப்பும்படி லைசென்ஸ் கொடுக்கப்படுமென்றும், ஆனால் ஜில்லா அதிகாரியின் இஷ்டம்போல் இந்த அறுபது பங்கை விடக்குறைத்தும் லைசென்ஸ் கொடுத்தல் கூடுமென்றும், ரப்பர் வியாபாரம் செய்பவர் யாவரும் லைசென்ஸ் பெற்றுத்தான் வாங்கல்

கொடுத்தல் செய்ய வேண்டுமென்றும் பிறவும் F. M. S. கவர்ன்மெண்டு கெஜட் கூறுகிறது. இதனால் விலையேறி யிருப்பதைவிட முன் நிலையிலிருந்தால் நலமாயிருக்குமென்று நாம் நினைக்கிறோம். கண்ட்ரோல் ஆபீஸினால் ஜனங்கட்குத் துன்பம் அதிகமாக ஏற்படலாம். தவிர, இந்த விலையேற்றத்திற்குக் காரணம் சரக்கின் இயல்பான பிரியமன்றென்பது நிச்சயமாகின்றது. கவர்ன்மெண்டாருடைய பெரு முயற்சியினாலேயே இவ்வேற்பாடு நடைபெறுகிறதென்று நமக்குத் தோன்றுகிறது. ரப்பருக்கு ஆபத்து வந்தால், மலாய் நாட்டில் ஜனங்களிருக்க மாட்டார்கள். இப்படியாக விலையைக் கொஞ்சம் ஏற்ற வழிசெய்து, பயிரைக் குறைத்துவிட முயன்றிருக்கின்றனரென்று கருத இடமில்லாமற் போய்விடவில்லை. அந்த நாட்டிற்கு இது நன்மை செய்யுமென்று கூறவேண்டியதில்லை. ஆனால், வியாபாரிகளும் முதலாளிகளும் பெருத்த நஷ்டத்தை யடையாமல் தீராது. ஒன்றையே நம்பி வாழும் வாழ்க்கையின் பலவீனத்தை இப்போது மலாய்நாடு மக்கட்குக் கற்பித்தது.

சம்பாவனை.

கண்டரமாணிக்கத்தில் ஸ்ரீமான் வி. சா. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்கள் நாளிதுமீ ௮௨ நடைபெற்ற தமது சகோதரரின் கலியாணத்தில் "குமாரனுக்கு" ரூபாய் ௧௦ சம்பாவனை செய்தனுப்பியுள்ளார்கள். அவர்கட்கு நன்றி செலுத்துகிறோம்.

மதிப்புரை.

சிவஞான சித்தியார் சுபக்கம், மூலமும் உரையும்.

உயர்ந்த சைவசித்தாந்த சாஸ்திரமாகிய சிவஞான சித்தியார் என்னும் சிறந்த நூலின் சுபக்கத்துக்குச், சின்னாட்களுக்கு முன் இலங்கையில் இலங்கிக் கொண்டிருந்த நிரவிளங்கத் தேசிகரவர்களால் எழுதப்பெற்ற விரிவுரையடங்கிய சஞ்சிகை நான்கனுள் இப்பொழுது நமது பார்வைக்கு முதல் மூன்று சஞ்சிகைகள் வந்திருக்கின்றன. இந்நூல் மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்று; அருணந்தி சிவாச்சாரியர் அருளிச்செய்தது. இதன் உயர்வைப் "பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே—ஓர் விருத்தப் பாதி போதும்." எனும் சிவபோக சார நூலாசிரியர் திருவாக்கால் நன்கு உணரலாம். இது பரபக்கம் சுபக்கம் என இருபிரிவாக வகுக்கப் பெறுவது. இந்நூலுக்கு, முன்னர், மறைஞானதேசிகர் சிவாக்கிரயோகிகள்

ஞானப்பிரகாச முனிவர் நிரம்பவழகிய தேசிகர் திராவிடமாபாடிய கர்த்தா முதலிய பெரியோர்கள் உரை கண்டிருக்கின்றார்கள். இஃது வற்றாத கடல் போன்ற நூல்களுள் ஒன்றாதலால், ஆராயுந்தோறும் ஆராயுந்தோறும் ஆராய்ச்சி செய்வோர்க்குப் பல அரிய புதிய கருத்துக்கள் தோன்றுதல் இயற்கை. ஆதலால், இத்தகைய பழைய நூல்களுக்குப் புதிதாக வரையப்பெறும் உரைகளும் நாம் ஆராயத்தக்கனவேயாம். இந்நூலின் உரை விளக்கமாக மிக எளிய நடையில் அமைந்திருப்பது போற்றத்தக்கது. மற்றும் இவ்வாசிரியரால் வரையப்பெற்ற சிவஞானபோதத் துத்தெளிவுரையும் ஒழிவிலொடுக்கத் துண்ணமைவிரிவும், கந்தானுபூதி யுரையும், திருமுறைப் பயிற்சிக்கொத்தும் பிறவும் இம்மாதிரி சஞ்சிகைகளாக வெளிவருமென்று தெரிகிறது. இவ்வுரைத் தமிழ்நூல்களைத் தமிழ் மக்கள் யாவரும் ஆதரிக்க வேண்டுவது கடமையாகும். உரையாசிரியத் தன்மையும் வன்மையு முடையோர் ஒருசிலரேயாக உள்ள தற்காலத்தில், இந்நூல்களுக்கு உரை வரைந்தருளிய தேசிகரவர்களுக்கும், இந்நூல்களை வெளியிடுவதில் மிகுந்தசிரத்தை கொண்டுள்ள பதிப்பாசிரியராகிய க. சிதம்பரநாதன் அவர்களுக்கும் நமது நன்றியறிதலைச் செலுத்துகிறோம். வேண்டுவோர் க. சிதம்பரநாதன் அவர்கள் Pro:t r,Sc கொழும்பு. என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்க.

அ. குமாரசுவாமிப் புலவர் சரிதம்.

இது சமீபத்தில் காலஞ்சென்ற யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களின் அரிய சரிதத்தை விளக்கிக்கூறும், கசு-பக்கங்கள் கொண்டதோர் சிறிய வசனநூல். இதன் ஆசிரியர், தமிழ்ப்பண்டிதர், வ. மு இரத்நேசுவரையர் அவர்கள்; கண்டாரமாணிக்கம். சரித்திரம் தெளிவாகவும் சுருக்கமாகவும் இருக்கிறது. இந்நூலின் பின்புறத்தில், புலவரவர்கள் இயற்றிய இனிய செய்யுட்கள் சில தொகுக்கப் பெற்றுள்ளன.

சாணக்கியசாகசம் அல்லது சந்திரகுப்த சரித்திரம்.

இந்நூலின் இரண்டாம் பாகம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இது, சந்திரகுப்தனது சரித்திரத்தைச் சாணக்கியனது சால்புடன்சாற்றும சரித்திர சம்பந்தமான தமிழ் நாவல். இவ்விரண்டாம் பாகம் எஅ-அத்தியாயங்களையுடையது; உச
0 பக்கங்கள்கொண்டது. நடைஎளிமையாகவும் சரிதம் நன்றாகவும் இருக்கிறது. இதனை இயற்றியவர்கள், ஸ்ரீமதி வி பாலம்மாள் அவர்கள்; வெளியிட்டார், திருச்சி நாஷனல்காலேஜ் தமிழாசிரியர் ம. கோபால கிருஷ்ண ஐயரவர்கள் இதன் விலை ரூ க—அ—0.

லக்ஷ்மி விஜயம்.

இதை யெழுதியவர் ஸ்ரீ ஜே. வேங்கடசுப்ரமணிய பாரதியார். கடியாபட்டி ஸ்ரீமான் சு. பழனியப்பா அவர்கள் இதனை வெளியிட்டிருக்கிறார்கள்

வழுவழுப்பான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஆங்காங்கே காணப்படும் பிழைகள் அடுத்த பதிப்பில் புதுப்பிக்கப் பெறுமென்று நம்புகிறோம். விலை அணா பத்து.

காந்தம்.

இது ஒரு சிறு கதை. உண்மைக் காதலை விளக்குவது. புதுவழி. எளிய நடை. அழகிய சிறு வாக்கியங்கள். ஆசிரியர் ஸ்ரீ வெ. ராஜகோபாலாச் சாரியாரவர்கள். விலை கால் ரூபாய்.

பூலோகத்து சப்த அதிசயங்கள்.

இது ௩௧ பக்கங்கள் கொண்ட அரிய சிறிய நூல். இது கீழ்நாட்டவராகிய கறுப்பு மனிதர்களால், மேல்நாட்டாருடைய நாகரிக காலத்திற்கு முந்திய மிகப்பழைமையானகாலத்தில் செய்யப்பெற்ற ஏழு சிற்பங்களை விளக்குகின்றது. இதன் விலை கால்ரூபாய். மேற்கூறிய இவ்விரண்டுபுத்தகங்களும் சென்னை, கோமளேசுவரன்பேட்டை, லோகோபகாரி ஆபீசில் கிடைக்கும்.

அகஸ்தியன்.

இப்பெயர் புனைந்த புதியமாதப்பத்திரிகையின் முதல்இரண்டு இலக்கங்கள் வரப்பெற்றோம். இதன் ஆசிரியராக, முன்னர் வைசியமித்திரன் உதவிப்பத்திராதிபராய் இருந்த நமது நண்பர் டி. கே. ராமபத்ர சர்மா அவர்கள் அமர்ந்திருப்பதற்கு மகிழ்வெய்துகிறோம். இதன் சொந்தக்காரர், கொட்டாரக்கரை பிர்மநிஷ்டாமடம் ஸ்ரீ சதாநந்த சுவாமிகள் ஆவர். இதன் வருடசந்தா உள்நாட்டிற்கு ரூபாய் மூன்று. வெளிநாட்டிற்கு ரூபாய் மூன்றரை. விலாசம்— அகஸ்தியனாசிரியர், அகஸ்தியாசிரமம், கொட்டாரக்கரை. S.I.R.

தோத்திரப் பாக்கள்.

முருகர் தியானம், கந்தப்புகழ் 1, 2; தோத்திர மஞ்சரி முதலிய நான்கு புத்தகங்களும் வரப்பெற்றோம். இவைகளில் முருகக்கடவுள், சிவபெருமான் உமாதேவியார் முதலிய தெய்வ ஸ்தோத்ரமான அன்பு பொதிந்த பாக்கள் நிறைந்துள்ளன. ஆசிரியர் திரு. கருணையானந்த மஸ்தான் சுவாமிகள் விஜயபுரம் திருவாரூர்.

ஞான சூரியன்.

இப்பெயர் புனைந்து, திரு. கருணையானந்த மஸ்தான் சுவாமிகளை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் இம்மாதப் பத்திரிகையில், ஞான மார்க்கத்தைப்பற்றிய பல கட்டுரைகள் அடங்கியுள்ளன. விலாசம், மானேஜர் ஞான சூரியன், விஜயபுரம் திருவாரூர்.